# 1 அறம் செய விரும்பு

விளக்கம் | நல்ல செயல்களைச் செய்வதற்கு மனம் விருப்பம் கொள்ள வேண்டும்

என்னங்க... அடுத்த வாரம் நம்ம பையனுக்கு பிறந்த நாள் வருது. அவனுக்கு டிரஸ் எடுக்கணும்.

பையன், இந்த வருடம் பிறந்த நாளுக்கு அவனோட நண்பர்களுக்கு விருந்து கொடுக்கணும்னு ஆசைப்படுறான்.

அதனால், ஏதாவது ஓட்டலில் சின்னதா ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தா நல்லா இருக்கும்... என்று தனது கணவரிடம் மகனின் ஆசையை எடுத்து கூறினாள் கற்பகம்.

என்ன கற்பகம்... நம்ம வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் நாம வழக்கமா என்ன செய்வோம்னு உனக்கு தெரியாதா...? புதுசா ஏதோ சொல்ற.

பசங்கன்னா... அவங்க ஆசைப்படுவதை சொல்லத்தான் செய்வாங்க. நாம தான் அவங்களுக்கு நம்ம எண்ணத்தை விளக்கி கூறனும் என்று கூறினார் ராமன்.

தனியார் வங்கியில் வேலை பார்த்து வருபவர் ராமன்.

சமூக அக்கறையுடன் பிறருக்கு உதவி செய்யும் நல்ல மனம். எந்த செயல் செய்தாலும் அது பிறருக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்.

அவரது மனைவி கற்பகம். வீட்டை கவனித்து கொள்பவர். அவர்களது மகன் சந்தோஷ். 8ம் வகுப்பு படித்து வருகிறான்.

அவர்கள் வீட்டில் யாருக்காவது பிறந்த நாள், அல்லது விசேஷம் என்றால் ராமன் தனது குடும்பத்துடன் அருகில் இருக்கும் அனாதை விடுதிக்கு தனது குடும்பத்துடன் சென்று அங்குள்ளவர்களுக்கு உணவு கொடுப்பது வழக்கம்.



அதை தவிர, ஏழை மாணவர்களின் படிப்புக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருவார் ராமன்.

இந்த ஆண்டு தனது பிறந்த நாளை தனது நண்பர்களுடன் கொண்டாட சந்தோஷ் ஆசைப்பட்டான்.

தனது விருப்பத்தை தாயிடம் தெரிவித்தான்.

அதற்கு தந்தை பதில் எதுவும் கூறாததால், மறுநாள் அவரிடம் நேரடியாக கேட்கலாம் என்று முடிவு செய்து தந்தையிடம் தனது நண்பர்களுக்கு விருந்து கொடுப்பது பற்றி கேட்டான் சந்தோஷ்.

டே சந்தோஷ்! நாளைக்கு உனக்கு பிறந்த நாள். காலையில் அனாதை இல்லத்துக்கு சென்று உணவு கொடுப்போம் அதற்கு பின் பார்க்கலாம் என்று சமாளித்தார் ராமன்.

உடனே சந்தோஷுக்கு கோபம் வந்தது.

அப்பா...! அங்க இருக்கிறவங்க யாருமே நமக்கு தெரியாது. அவங்க ளுக்கு சாப்பாடு கொடுக்கிறதால நமக்கு என்ன வந்துச்சு? பிறருக்கு உதவி செய்வதால் நமக்கு எந்த பயனும் கிடையாது என்று கூறினான்.

தனது மகன் தர்மம் செய்யும் எண்ணம் இல்லாமல் இருப்பதை

புரிந்து கொண்ட ராமன், அவனுக்கு அதை பக்குவமாக எடுத்து கூறினார்.

சந்தோஷ். அனாதை இல்லத்தில் இருப்பவர்களுக்கு தாய், தந்தை கிடையாது. அவங்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்காது. நல்ல டிரஸ் கிடைக்காது. கிடைத்ததை வைத்து வாழ்பவர்கள் அவர்கள். நம்மை போன்றவர்கள் அவர்களுக்கு செய்யும் சிறிய உதவி, பெரிய சந்தோஷத்தை கொடுக்கும்.

சந்தோஷ். நான் சிறு வயதில் சாப்பாட்டுக்கு கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டவன்.

எங்க அப்பா கூலி தொழிலாளி. நாங்க ஒரு நாளைக்கு ஒரு வேளை தான் சாப்பிடுவோம். மற்ற நேரமெல்லாம் பட்டினியில் தான் இருப்போம். பசியின் கொடுமை எப்படி இருக்கும் என்று நான் அனுபவித்து இருக்கிறேன். படிக்க வசதி கிடையாது.

ஒரு சிலர் செய்த உதவியால் தான் படிச்சு நான் வாழ்க்கையில் முன்னேறினேன்.

எனக்கு யாரும் உதவி செய்யாமல் இருந்தால் நானும் படிக்காமல் கூலி வேலைக்கு தான் சென்று இருப்பேன். நீயும் இந்த மாதிரி சந்தோஷமாக இருக்க முடியாது.

நாம் செய்யும் தர்மம் நம்மை மட்டுமல்ல... நம் சந்ததியையே வாழ வைக்கும்.

நமக்கு வீடு, நல்ல டிரஸ், நல்ல சாப்பாடு இல்லாம கஷ்டப்பட்டா எப்படி இருக்கும்னு நீயே யோசித்து பாரு...!

நீயும், உன்னால் முடிந்த அளவுக்கு பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்பதற்காகவே உன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் இந்த மாதிரி அனாதை இல்லங்களுக்கு உணவு கொடுத்து, அவங்களோட கஷ்டத்தை உனக்கு சொல்லிக் கொடுக்கிறேன்.

தர்மச் செயல்களை விருப்பத்துடன் செய்ய வேண்டும் என்று ராமன் கூறினான்.

தனது தந்தை கூறியதை கேட்ட சந்தோஷிற்கு கண்ணில் கண்ணீர் வந்தது. தான் பேசுவது தவறு என்று உணர்ந்தான்.

உடனே கற்பகம் வேகமாக வந்து என்னங்க... சின்ன பையனிடம் போய் இதெல்லாம் சொல்லிக்கிட்டு என்று சந்தோஷை தன் பக்கம் இழுத்து, சரி. சரி! நாளைக்கு காலையில் பார்த்துக் கொள்ளலாம் தூங்க போங்க என்று கூறி தனது மகனுடன் தூங்க சென்றாள் கற்பகம்.

காலை பொழுது விடிந்ததும் புத்தாடை அணிந்தான் சந்தோஷ்.

தாயும் தந்தையும் அவனுக்கு வாழ்த்து சொல்லி இனிப்பு வழங்கினர். பின்னர் கோவிலுக்கு சென்று விட்டு அருகில் உள்ள அனாதை இல்லத்துக்கு மூன்று பேரும் சென்றனர்.

அங்கிருந்தவர்களுக்கு தான் ஏற்பாடு செய்த உணவுகளை கொடுக்க சென்றார் ராமன்.

அப்போது சந்தோஷ், தனது தந்தையிடம் அப்பா நானே என் கையால் அவர்களுக்கு கொடுக்கிறேன் என்று கூறி அங்கிருந்தவர்களுக்கு தனது கையால் உணவு பரிமாறினான். மேலும் தான் கொண்டு வந்த இனிப்புகளையும் அனைவருக்கும் வழங்கினான்.

அவர்கள் அந்த உணவுகளை ஆனந்தமாக ரசித்து, ருசித்து சாப்பிடுவதை பார்த்து சந்தோஷ் மகிழ்ச்சி அடைந்தான்.

அங்கிருந்தவர்கள் சந்தோஷிற்கு பிறந்த நாள் வாழ்த்து கூறினார்கள்.

தனது மகனின் செயலை கண்டு ராமன் ஆனந்தமடைந்தார்.

சந்தோஷ் ஆசைப்பட்டதை போல் அவனது நண்பர்களுக்கு ஓட்டலில் விருந்து கொடுத்தார் ராமன்.

தனது தந்தையை போல சந்தோஷ், தர்ம செயல்களை விருப்பப்படி செய்ய தொடங்கினான்.

# 2 ஆறுவது சினம்

விளக்கம் | கோபம் தணியும் தன்மையுடையது. மணிக் கணக்கில், நாள் கணக்கில், மாதக் கணக்கில், நேரக் கணக்கில் இருக்காது.

டேவிட்டின் குடும்பம் வசதியான குடும்பம். அவனது தந்தை ராஜாராம் எலக்ட்ரானிக் கடை நடத்தி வரும் தொழில் அதிபர்.

டேவிட் ஒரே மகன் என்பதால் அவனை செல்லமாக வளர்த்தனர்.

டேவிட்டின் நண்பன் மனோகர்.

டேவிட்டும், மனோகரும் சிறுவயது முதல் ஒன்றாக படித்து வருகின்றனர். அவர்கள் இரண்டு பேரும் எப்போதும் ஒன்றாகத் தான் சுற்றுவார்கள்.

மனோகரின் தந்தை வாடகை கார் ஓட்டி வந்தார்.

பிளஸ் -2 முடித்த அவர்கள் இரண்டு பேரும் ஒரே என்ஜினீயரிங் கல்லூரியில் சேர்ந்தனர்.

கல்லூரிக்கு செல்வதற்காக புதிய பைக் வேண்டும் என்று தனது தந்தையிடம் டேவிட் கேட்டான்.

தனது மகனுக்கு ஒரு சாதாரண பைக் வாங்கி தருவதாக ராஜாராம் கூறினார்.

ஆனால் டேவிட் மறுத்துவிட்டான். தனக்கு ரேஸ் மாடல் பைக் தான் வேண்டும் என்று அடம்பிடித்தான்.

அதை வாங்கிக் கொடுத்தால், டேவிட்டுக்கு நடக்கக் கூடாதது ஏதாவது நடந்து விடுமோ? என்று பயந்து மறுத்தார்.

டேவிட் கோபக்காரன் என்பதால் தான் விரும்பிய பைக் தான் வேண்டும் என்று அடம்பிடித்து சண்டை போட்டான்.

அதைத் தொடர்ந்து அவன் விரும்பிய மாடல் பைக்கை வாங்கிக் கொடுத்தார் ராஜாராம்.

டேவிட்டும், மனோகரும் தினமும் அந்த பைக்கில் ஒன்றாக கல்லூரிக்கு செல்வது வழக்கம்.

டேவிட் வண்டி ஓண்டினால் வண்டியின் சக்கரம் தரையில் படாமல் பறக்கும். அந்த அளவுக்கு இளமை துடிப்பில் வண்டி ஓட்டுவான்.

அன்று காலை வழக்கம் போல் தனது நண்பன் மனோகரனை வண்டியில் ஏற்றிக் கொண்டு கல்லூரிக்கு மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்த டேவிட், ஒரு திருப்பத்தில் வண்டியை திருப்பினான்.

அப்போது அந்த வழியாக தனது இரண்டு சக்கர வாகனத்தில் மெதுவாக வந்து கொண்டிருந்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் கருணாகரன் எதிர்பாராத விதமாக டேவிட்டின் மோட்டார் சைக்கிள் எதிரில் புகுந்துவிட்டார்.


தனது மோட்டார் சைக்கிளின் எதிரே முதியவர் ஒருவர் திடீரென புகுந்ததை பார்த்து திடுக்கிட்ட டேவிட், அவர்மீது மோதாமல் இருக்க பிரேக்கை அழுத்தி பிடித்தான்.

அவன் வேகமாக வந்ததால் வண்டி அவன் கட்டுக்குள் வராமல் கருணாகரன் வண்டியின் மீது மோதி நின்றது.

அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால், இரண்டு வண்டிகளும் பலத்த சேதமடைந்தன.

விபத்துக்கு தானே காரணம் என்பதால் கருணாகரன், ''சாரி தம்பி.... சாரி... ஏதோ கவனம் இல்லாமல் வந்துட்டேன்'' என்றார்.

தான் ஆசையாய் வாங்கி வண்டி சேதமடைந்ததை பார்த்ததும் டேவிட்டுக்கு கோபம் தலைக்கு ஏறியது.



உடனே முதியவர் கருணாகரனை பார்த்து, ''என்ன பெரிசு... வீட்டில் சொல்லிட்டு வந்துட்டியா.... உனக்கு வேற வண்டி கிடைக்கலையா.... என் வண்டி தான் கிடைச்சுதா...'' என்று ஒருமையில் திட்டத் தொடங்கினான்.

அவனுடன் சேர்ந்துக் கொண்டு மனோகரும் பெரியவர் கருணாகரனை திட்டினான்.

தன் மீது தவறு என்பதால் பொறுமையாக இருந்த கருணாகரன் சின்ன பசங்க ஒருமையில் பேசியதால் அவருக்கும் கோபம் வந்தது.

கோபத்தை கட்டுப்படுத்தி பொருமையாக தம்பி நான் செய்தது தவறு தான்... அதுக்கு தான் சாரி சொல்லிட்டேன்.... உன் வண்டிக்கு என்ன செலவு ஆகுமோ... அதை நானே கொடுத்திடுறேன்... கொஞ்சம் மரியாதையா பேசுங்க.

நான் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர். என் வயசுக்கும், என் வேலைக்கும், கொஞ்சம் மரியாதை கொடுத்து பேசுங்கள் என்று அமைதியாக பேசினார் கருணாகரன்.

ஆனால், டேவிட்டும் கருணாகரனும் அவர் பேசியதை காதில் வாங்காமல் மேலும் மேலும் ஒருமையிலேயே அவரை திட்டிக் கொண்டு இருந்தனர்.

கருணாகரன் பொறுமையாக இருந்து, டேவிட்டை சாமதானப் படுத்தி பார்த்தார்.

அவர்கள் கேட்பதாக இல்லை.

இதைப் பார்த்து அந்த வழியாக வந்தவர்கள் அங்கு கூடிவிட்டனர்.

ஒரு வயதானவரை இளைஞர்கள் திட்டுவதை பார்த்து அவர்களுக்கு மனசு தாங்கவில்லை.

உடனே டேவிட்டையும் மனோகரையும் அங்கிருந்தவர்கள் கண்டிக்கத் தொடங்கினர்.

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் போலீசுக்கு போன் செய்றேன். போலீஸ் வந்து பார்த்துகிடட்டும் என்று கூறினான்.

அனைவரும் ஒன்று திரண்டு பேசத் தொடங்கியதும் டேவிட்டும் மனோகரும் அமைதியானார்கள்.

போலீசை கூப்பிடுகிறேன் என்று ஒருவர் சொன்னதை கேட்டதும் டேவிட் கோபத்தை குறைத்துக் கொண்டான்.

ஏனென்றால் டேவிட்டிடம் வண்டி ஓட்டுவதற்கான லைசென்ஸ் கிடையாது.

போலீஸ்காரர் வந்தால் முதலில் லைசென்சைதான் கேட்பான். அதனால் டேவிட் தனது கோபத்தைக் குறைத்துக் கொண்டான்.

உடனே கருணாகரன், அங்கிருந்தவர்களிடம் விடுங்க சார்... சின்ன பசங்க கோபத்தில் பேசுறாங்க என்று பெருந்தன்மையுடன் கூறினார்.

தம்பிகளா...! உங்களுக்கு கோபம் வருவது நியாயம் தான். ஆனால், அதற்காக வயது வித்தயாசம் பார்க்காமப் பேசக்கூடாது. கோபத்தை குறைக்க முயற்சிக்க வேண்டும். கோபம் கட்டுப்படுத்தக் கூடியது தான். கோபத்தில் பேசுவதால் எந்த பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது.

தெரியாமல் நடந்த தவறு... நான் உங்களது வண்டியை சரி செய்யும்

முழு செலவையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று கருணாகரன் மீண்டும் கூறினார்.

அப்போது அங்கு கூடியிருந்தவர்கள், தம்பி அவர் தான் முழு செலவையும் ஏற்றுக் கொள்கிறாரே... அமைதியா போங்க! என்று கூறினார்.

டேவிட்டின் கோபம் கட்டுக்குள் வந்தது.

அதைத்தொடர்ந்து கருணாகரன், டேவிட்டையும், மனோகரையும் அழைத்து வண்டியை மெக்கானிக் கடைக்கு கொண்டு சென்று அதை சரி செய்வதற்கான முழுத் தொகையும் செலுத்தினார்.

மீண்டும் பழைய நிலைக்கு தனது வண்டி வந்துவிட்டதை பார்த்து டேவிட் மகிழ்ச்சி அடைந்தான்.

# 3 இயல்வது கரவேல்

விளக்கம் | செய்வதற்கு இயன்ற தருமத்தை செய்யாமல் இருத்தல் கூடாது.

அந்தியூர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய ஆசிரியராக சுந்தரம் நியமிக்கப்பட்டார்.

அந்த பள்ளியில் ஏற்கனவே 10 ஆசிரியர்கள் வேலை பார்த்து வந்தனர். அவர்கள் பக்கத்து நகரத்தில் குடும்பத்துடன் தங்கியிருந்து தினமும் பள்ளிக்கு வந்து சென்றனர்.

சமூக அக்கறை கொண்ட சுந்தரம் தனது மனைவி மற்றும் இரண்டு மகன்களுடன் அதே ஊரில் குடியேறினார்.


அந்தியூரைச் சுற்றி 4 கிராமங்கள் இருந்தன. அந்த கிராமங்களை சேர்ந்த மாணவர்கள் அனைவரும் அந்தியூர் பள்ளியில் படித்து வந்தனர்.

அந்தப் பள்ளியில் 10ம் வகுப்பு வரை உள்ளதால் அங்கு படிக்கும் மாணவர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு படிக்க வேண்டும் என்றால் 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளிக்கு செல்ல வேண்டிய நிலை இருந்தது.

இதனால் அந்தக் கிராமங்களை சேர்ந்த ஒரு சிலரே வெளியூர் சென்று படித்தனர். பெரும்பாலானவார்கள் 10ம் வகுப்புக்கு மேல் படிக்காமல் வேலைக்கு செல்லத் தொடங்கினர்.

இதை அறிந்த ஆசிரியர் சுந்தரம் மிகவும் வருத்தம் அடைந்தார்.

கல்வித் துறை அதிகாரிகளை சந்தித்து, அந்த பள்ளியை



மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த என்ன செய்ய வேண்டும் என்ற விவரத்தை கேட்டார்.

மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த கூடுதல் இட வசதி மற்றும் கட்டிட வசதி தேவை என்றும் அறிவுரை வழங்கினர்.

அந்த ஊரில் உள்ள மக்களிடம் இது பற்றி எடுத்துக் கூறினார் சுந்தரம்.

அந்த பள்ளிக்கூடம் இருக்கும் இடம் ஊர் பெரியவர் சண்முகத்தின் தாத்தாவின் இடம் என்றும் அவர் தான் இந்த பள்ளியை தொடங்க தனது இடத்தை கொடுத்தது மட்டுமல்லாமல், அதற்கு தேவையான நிதி உதவி வழங்கியதையும் ஊர் மக்கள் கூறினார்கள்.

அந்தப் பள்ளிக்கூடத்தை சுற்றியுள்ள இடங்கள் சண்முகத்திற்கு உரியது என்றும் அவர் மனசு வைத்தால் தான் இது சாத்தியம் என்றும் எடுத்துக் கூறினர்.

ஊர் பெரியவர் சண்முகத்தை நேரில் சந்தித்து விபரத்தை எடுத்துக் கூறுங்கள் என்று ஆசிரியர் சுந்தரம் ஊர் மக்களிடம் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

அனைவரும் ஊர் பெரியவர் சண்முகத்தை சந்தித்து விபரத்தை எடுத்துக் கூறலாம் என்று அவரது வீட்டுக்கு சென்றனர்.

4 கிராமங்களை சேர்ந்த மாணவர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு படிக்க முடியாமல் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நீங்க மனசு வைத்து கூடுதல் இடம் கொடுத்தால் உயர்நிலைப்பள்ளியாக மாற்றலாம்.

உங்களுக்கு கோடி புண்ணியம் ஐயா! என்று கூறினார்.

அவர்கள் கூறியதை கேட்டுக் கொண்டிருந்த சண்முகத்திற்கு கோபம் வந்தது.

யார் வீட்டு சொத்தை யாருக்கு கொடுக்கிறது. ஒரு அடி இடம் கூட கொடுக்கமாட்டேன்.

எங்க தாத்தன் முட்டா பையன். யாரோ அவனை ஏமாத்தி இந்த இடத்தை வாங்கிக்கிட்டு அங்கு பள்ளிக் கூடம் கட்டிக்கிட்டாங்க.

அதையே நான் எப்படி காலி செய்யலாம்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.

மரியாதையா அம்புட்டு பசங்களும் இங்கிருந்து போயிடுங்க என்று கோபமாக பேசத் தொடங்கினார் சண்முகம்.

வேறு வழியில்லாமல் ஊர் மக்கள் அமைதியாக அங்கிருந்து புறப்பட்டு சென்று நடந்த விபரத்தை ஆசிரியர் சுந்தரத்திடம் எடுத்துக் கூறினர்.

ஆசிரியர் சுந்தரம் தானே நேரில் சென்று ஊர் பெரியவர் சண்முகத்தை சந்தித்து பேசுவதாக கூறினார்.

இதற்கு எல்லாம் காரணம் ஆசிரியர் சுந்தரம் தான் என்று சண்முகத்திற்கு தெரியவந்தது.

உடனே தனது வேலை ஆட்களை அனுப்பி ஆசிரியர் சுந்தரத்தை எச்சரித்தார் சண்முகம்.

ஆசிரியர் சுந்தரம் மனம் தளரவில்லை.

ஊர் பெரியவர் சண்முகத்தை நேரில் சந்திக்க அவரது வீட்டிற்கு சென்றார்.

ஆசிரியரை பார்த்தும் சண்முகத்திற்கு கோபம் வந்தது...

என்ன வாத்தியாரே.... உன் வேலையை பார்த்துக்கிட்டு போகமாட்டியா... வந்தோமா... பாடத்தை நடத்தினோமா... சம்பளத்தை வாங்கினோமா.... பொண்டாட்டி புள்ளைகளோடு சந்தோஷமா இருந்தோமான்னு இருக்கணும்.

அதை விட்டுட்டு ஊருக்கு நல்லது செய்யேறன்னு தேவையில்லாத விஷயத்தில் இறங்கக்கூடாது என்று கோபமாக பேசினார்.

ஆசிரியர் சுந்தரம் அவரை சமாதானம் படுத்தினார்.

ஐயா...! இன்னைக்கு அந்த பள்ளிக்கூடத்திற்கு யார் பெயரை வச்சிருக்காங்க.... உங்க தாத்தா பெயர்.

நீங்க இன்னைக்கு பேசுற மாதிரி அன்னைக்கு உங்க தாத்தாவும் பேசியிருந்தா இந்த மாதிரி பள்ளிக்கூடம் வந்திருக்குமோ?

உங்க தாத்தா செய்த அந்த உதவியில் தான் உங்க கிராமத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் படிக்க முடிஞ்சது.

அவங்க எல்லாரும் உங்களையும் உங்க குடும்பத்தையும் வாழ்த்திக்கிட்டு இருக்காங்க.

சுற்றியுள்ள 4 கிராம மக்களும் உங்க பெயரை சொன்னாலே அவ்வளவு மரியாதை கொடுக்கிறாங்க. இதுக்கு காரணம் உங்க தாத்தா கொடுத்த அந்த இடத்திற்குதான்.

தருமம் செய்வதே பெரிய புண்ணியம். தருமத்திலே சிறந்த தருமம் எதுன்னா... நாலு பேர் படிக்கிறதுக்கு உதவி செய்றது தான்.

உங்களால் எத்தனை ஆயிரம் மாணவர்கள் பயனடைவார்கள்.

நீங்க இன்னைக்கு செய்ற தருமம் உங்களோட அடுத்த தலைமுறைக்கும் புண்ணியத்தை கொடுக்கும்.

செய்வதற்கு இயன்ற அளவு தருமத்தை செய்யாமல் இருப்பது

தவறாகும். உங்களால் முடிந்த அளவு இடத்தை இலவசமாக கொடுங்க.

மீதி இடத்திற்கு ஊர் மக்கள் எல்லாம் சேர்ந்து பணம் வசூல் செய்து கொடுப்பாங்க. அந்த தொகையை வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஆசிரியர் சுந்தரம் கூறினார்.

அப்போது சண்முகத்தின் குடும்பத்தினரும், பள்ளிக்கூடம் கட்டுவதற்கு தேவையான இடத்தை கொடுக்கலாம் என்று சண்முத்திடம் கூறினர்.

அவர்கள் கூறியதை கேட்டதும் சண்முகத்தின் மனம் மாறியது.

பள்ளிக்கூடம் கட்டுவதற்கு தேவையான இடத்தை தருவதாக சம்மதம் தெரிவித்தார்.

ஆசிரியர் சுந்தரம் அந்த பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

பள்ளியில் கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

அதைத் தொடர்ந்து அந்த பள்ளிக்கூடம் தரம் உயரத்தப்பட்டது.

தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கூடத்தை ஊர் பெரியவர் சண்முகம் திறந்து வைத்தார்.

ஊர் மக்கள் அனைவரும் அவரை பாராட்டினர்.

# 4 ஈவது விலக்கேல்

விளக்கம் | ஒருவர் மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்று தடுக்கக்கூடாது.

காலை நேரம், ஹரி வங்கியில் தனக்குரிய வேலையை பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவனது செல்போன் மணி அடித்தது.

சட்டை பையில் இருந்த போனை எடுத்து பார்த்தான் ஹரி.

போனை துண்டித்து விட்டு மீண்டும் தனது வேலையை தொடர்ந்தான்.

5 நிமிடத்திற்கு பின் மீண்டும் செல்போன் மணி அடித்தது.

எடுத்து பார்த்தான் ஹரி.

போனை துண்டித்து விட்டு தனது வேலையை தொடர்ந்தான்.

மீண்டும் செல்போன் மணி அடித்ததும் யார் அழைப்பது என்பதை கூட பார்க்காமல்,

கோபத்துடன் போனை எடுத்த ஹரி நான் வெளியூரில் இருக்கேன். வங்கிக்கு வர நான்கு நாட்கள் ஆகும். நான் வந்ததும் கூப்பிடுறேன் என்று வேகமாக பேசினான்.

அப்போது செல்போனின் எதிர்முனையிலிருந்து,

''டே.... ஹரி நான் விக்ரம் பேசுறேன்'' எந்த ஊருக்கு போயிருக்க? என்று கேட்டான்.

உடனே போனை பார்த்த ஹரி, போனில் பேசுவது தனது நண்பன் தான் என்பதை உறுதிப்படுத்தினான்.

சாரி மச்சான்.... நான் வேறு ஒருத்தேன்னு நினைச்சேன். அவன்தான் 10 நிமிஷமா... மாறி மாறி கூப்பிட்டுக்கிட்டு இருந்தான்.

அவன்னு நினைச்சு உன்னிடம் பேசிட்டேன்' என்று தனது நண்பனிடம் வருத்தம் தெரிவித்தான் ஹரி.

யாருடா மச்சான் அது..?

ஒருநாள் எங்க வங்கிக்கு அருகில் உள்ள டீக்கடையில் நின்னுக்கிட்டு இருந்தேன். அப்போ ஒருத்தன் வந்தான். சார்... டீ வாங்கி கொடுங்கன்னு! கேட்டான்.

நானும் டீ வாங்கிக் கொடுத்தேன்.

அப்புறும் என்னுடன் பேசிக் கொண்டே இருந்தவன் நான் பேங்க்கில் வேலை பார்க்கிறதை கேட்டுக்கிட்டு, மறுநாள் என் வங்கிக்கே என்னை தேடி வந்து கொஞ்சம் பணம் வேணும்னு கேட்டான். ஒருமுறை கொடுத்தேன். மறுபடியும் வர தொடங்கிட்டான்.

அவனை பார்த்தா ஏமாத்துக்காரன்னு தெரிஞ்சுக்கிட்டு விரட்டி விட்டேன்.

அவனிடம் என் போன் நம்பரை கொடுத்துட்டேன்...

தினமும் எனக்கு போன் செய்து பணம் கேட்டு தொல்லைக் கொடுக்கிறன்.

இப்ப கூட 10 நிமிஷமா போன் பண்ணிக்கிட்டு இருந்தான்.

அந்த நேரத்தில் உன் போன் வந்ததால், அவன் தான் என்று நினைத்து உன்னை திட்டிட்டேன் என்றான் ஹரி.

மச்சான் உனக்கு எவ்வளவு சொன்னாலும் புரியாது? எவனாவது கஷ்டமா இருக்குன்னு சொன்னா போதும். உடனே வாரி வழங்கிடுவ.... பெரிய பாரி வள்ளல் என்று உன் மனசுல நினைப்பு.

இவ்வளவு பட்டும் திருந்த மாட்டேங்கிற... என்றான் விக்ரம்.

மச்சான் முக்கியமான விஷயமா... கொஞ்சம் வேலை இருக்கு.

அப்புறம் கூப்பிடட்டுமா? என்று ஹரி கேட்டான்.

இன்னைக்கு சனிக்கிழமை உன்னை பார்க்கலாமான்னு நினைச்சு உனக்கு போன் போட்டேன் என்று விக்ரம் கூறினான்.

1 மணிக்கு எங்க ஆபிசுக்கு வா.... நான் வேலையை முடிச்சிட்டு உனக்காக காத்திருக்கிறேன். இரண்டு பேரும் சேர்ந்து மதிய சாப்பாட்டுக்கு ஓட்டலுக்கு போகலாம் என்று கூறிய ஹரி தனது செல்போனை துண்டித்து விட்டு தனது வேலையை தொடர்ந்தான்.

ஹரியும் விக்ரமும் கல்லூரியில் ஒன்றாக படித்த நெருங்கிய நண்பர்கள்.

படிப்பு முடிந்ததும் ஹரி வங்கியில் வேலைக்கு சேர்ந்தான்.

விக்ரம் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறான்.

பெரும்பாலும் சனிக்கிழமை அவர்கள் இருவரும் சந்தித்து கொள்வது வழக்கம்.

ஹரி மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன்.

அவன் படித்து வங்கியில் வேலைக்கு சேர்ந்ததால் அவனது குடும்பம் நல்ல நிலைக்கு வந்தது.

தான் கஷ்டப்பட்டு வளர்ந்ததால் கஷ்டபடுபவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும் என்று நினைப்பவன்.

அவனது இந்த நல்ல மனதை தெரிந்து கொண்டே சிலர் அவனை ஏமாற்றுவதும் உண்டு. அதை பற்றி எல்லாம் கவலை படாமல் தன்னால் முடிந்த அளவு பிறருக்கு உதவி செய்து கொண்டு இருப்பான் ஹரி.

விக்ரமுக்கு ஹரி பிறருக்கு உதவி செய்வது பிடிக்காது. ஹரி உதவி செய்யும் போது தடுப்பதும் உண்டு.

மதியம் 1 மணியானது தனது வேலையை முடித்துக் கொண்டு ஹரி வேலை பார்க்கும் வங்கியின் வாசலில் வந்து நின்றான் விக்ரம்.

ஹரியும் வேலை முடித்து வெளியே வந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டனர்.

பின்னர் இருவரும் ஒரே வண்டியில் அந்த பகுதியில் உள்ள ஒரு பெரிய ஓட்டலுக்கு சென்றனர்.

ஹரி வண்டியை நிறுத்திக் கொண்டிருந்தான். விக்ரம் அருகில் நின்றான்.

அப்போது அங்கு வந்த ஒரு வயதான பெண்...

சார்... பசிக்குது காசு கொடுங்க என்று கேட்டாள்.

உடனே விக்ரம்

போம்மா... போம்மா... அந்த பக்கம் போ என்று கூறினான்.

வண்டியை நிறுத்திவிட்டு திரும்பி பார்த்த ஹரி, அந்த பெண்ணை பார்த்ததும், தனது பையில் இருந்து 10 ரூபாயை எடுத்துக் கொடுக்க போனான்.

உடனே விக்ரம், டே மச்சான் இவங்களுக்கு எல்லாம் வேறு வேலை கிடையாது. பிச்சை எடுப்பது இவங்களுக்கு ஒரு வேலையா போயிடுச்சு... நீ வாடா போகலாம் என்று கூறியது மட்டுமல்லாமல்,

அந்த வயதான பெண்ணிடம், ஏம்மா... போன்னு ஒரு முறை சொன்னா கேட்கமாட்டேயா... போம்மா போ... என்று அதட்டலாக கூறினான்.

அந்த பெண் உடனே கையை எடுத்து குப்பிட்டு ஐயா சாமி, பசிக்குது, அவரே பெரிய மனசு பண்ணி கொடுக்கிறாரு. அதை ஏன் சாமி தடுக்கிறேங்க.

நான் நல்லா சாப்பிட்டு பல நாட்டுகள் ஆயிடுச்சு...என்று மெல்லிய குரலில் ஹரியை பார்த்து மீண்டும் பணம் கேட்டாள்.

ஹரிக்கு மனசு கேட்கலை...


ஏம்மா... சாப்பாடு வாங்கிக் கொடுத்தா சாப்பிடுறயா... என்று கேட்டான்.

ஐயா சாமி.... புண்ணியமா போச்சு சாமி... தாராளமா சாப்பிடுவேன் ஐயா! என்று கூறினாள்.

அப்போது விக்ரம் குறுக்கிட்டு, டே மச்சான் காசே

# 5 ஊக்கமது கைவிடேல்

விளக்கம் | தன்னம்பிக்கையை ஒரு போதும் இழக்கக்கூடாது.



சுரேஷ் பெட்ரோல் நிலையத்தில் கணக்கு எழுதும் வேலை பார்த்து வருகிறார்.

அவரது மனைவி மல்லிகா. அவர்களுக்கு இரண்டு மகன்கள்.

இரண்டாவது மகன் மூர்த்தி. டிப்ளமோ முடித்து பெரிய கார் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்து வருகிறான். நல்ல சம்பளம் .

பெரியவன் சரவணன். பி.காம். முடித்து மூன்று ஆண்டுகளாக சி.ஏ. படித்துக் கொண்டிருந்தான். அவனது லட்சியம் ஆடிட்டராவதே. அதனால் முழுவீச்சில் படித்துக் கொண்டிருந்தான்.